உ
சிவமயம்
ஸ்ரீ அண்ணாமலையார் துணை

அண்ணாமலையெம் அண்ணா போற்றி !
கண்ணாரமுதக் கடலே போற்றி !!

தென்னானுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!



திருஅண்ணாமலை

## அருள்மிகு அபீதகுசாம்பாள் சமேத அருணாசலேசுவரர் திருக்கோயில்

# ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ஸ்வர்ணபந்தன மஹாகும்பாபிஷேகப் பத்திரிகை

### திருஞானசம்பந்தர் தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைமுழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை
வழுவாவண்ணம் அறுமே.

### திருநாவுக்கரசர் தேவாரம்

தேடிச் சென்றுதிருந்தடி யேத்துமின்
நாடிவந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம்நமது உள்ள வினைகளே.

### திருக்கார்த்திகை தீபமகிமை

கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒரு ஜோதி
மலைநுனியில் காட்டாநிற்போம்
வாய்த்தஅந்தச் சுடர் காணில் பசிபிணி
இல்லாதுலகில் மன்னிவாழ்வார்
பார்த்திவர்க்கும் அருந்தவைக்கும் இடையூறு
தவிரும் இது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்துஓர் தலைமுறைக்கு
முக்திவரம் கொடுப்போம் என்றார்.

### சுந்தரர் தேவாரம்

தேனைக் காவல் கொண்டுவிண்ட
கொன்றைச் செழுந்தாய்
வானைக் காவல் கொண்டுநின்றார்
அறியாநெறியானே
ஆனைக் காவில் அரனேபரனே
அண்ணாமலையானே
ஊனைக் காவல் கைவிட்டுன்னை
உகப்பார் உணர்வாரே.

### மாணிக்கவாசகர் தேவாரம்

விண்ணாளுந் தேவர்க்குமேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்குமாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டிநாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணுபெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

### அண்ணாமலையார் துதி

ஒருமானைக் கரத்தினில் வைத்துஒருமானைச்
சிரத்தினில் வைத்துஉலகம் ஏழும்
தருமானை இடத்தினில் வைத்து அருள்வானை
பவளநெடும் சயிலம் போல
வரும் ஆனைமுகத்தானை அளித்தானை
பொரும் ஆனைமகிழறும்
பெருமானை அருணகிரிப் பெம்மானை
அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்.

### உண்ணாமுலையம்மன் துதி

காரொழுகும் குழலானை கருணைவழிந்து
ஒழுகும் இரு கடைக்கண்ணாளை
மூரல் இள நிலவொழுகப் புழுகொழுக
அழகொழுகும் முகத்தினாளை
வார் ஒழுகும் தனத்தானை வடிவொழுகித்
தெரியாதமருங்குலாளை
சீர் ஒழுகும் பதத்தாளை அருணை
உண்ணாமுலையாளைச் சிந்தைசேர்ப்போம்.

### கும்பாபிஷேக பலன் (அர்கமான் ஆகம சுலோக மொழி பெயர்ப்பு)

உமையொரு பாகத்து அமலமாகிய
சிவபிரானுக்குச் சிறப்பு செய்யும்
கும்பாபிடேக பலன் கூறுதும் கேண்மோ
ஆகமங்கள் அருளியவாறே
கும்பாபிடேகம் குயிற்றிய பற்றற விடுவர்
வீடு விரும்பினோர் வீடு பெறுகின்றனர்
நாடு விரும்பினோர் நாடு பெறுகின்றனர்

புதல்வரை விரும்பினோர் புதல்வரைப் பெறுவர்
சிதைவின்மை விரும்பினோர் சிதைவின்மை பெறுவர்
பொருளை விரும்பினோர் பொருளை பெறுகின்றனர்
அருளை விரும்பினோர் அருளை பெறுவர்
ஞானம் விரும்பினோர் ஞானம் பெறுவர்
மோனம் விரும்பினோர் மோனம் பெறுவர்
அரோகம் விரும்பினோர் அரோகம் பெறுவர்

ஆயுளை விரும்பினோர் ஆயுளைப் பெறுவர்
இம்மையின் மகப்பேறிருஞ்செல்வ முடையராய்த்
தேகாந்தத்தில் சிவசாயுச்சியம்
பெறுவராதலிற் பெரிதா முயற்சியால்
தேவ தேவன் சிவபெருமானுக்கு
அட்டபந்தனம் செய்து அரிய பெரிய
கும்பாபிடேகங் குயிற்றுக வெண்பவே.

ஞானத்தபோதனைரை வா என்று அழைக்கும் மலை திருவண்ணாமலை, மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் சிறப்பு பெற்று விளங்கக் கூடியது. நினைத்தாலே முக்தி அளிக்கக் கூடிய கருணாமூர்த்தியாக விளங்குபவர் அருள்மிகு உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையார். பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்கக்கூடியது. அருள்மிகு உண்ணாமுலையம்மனுக்கு இடப்பாகம் அளித்து கார்த்திகை தீபத் திருவிழாவில் அர்த்தநாரீஸ்வரராக சிவசக்தி ஸ்வரூபமாக பக்தர்களுக்குக் காட்சி அளித்து அருள்பாலிக்கின்றார்.



மலையே சிவலிங்கமாகவும், சுயம்புலிங்கமாகவும் எழுருந்தருளி பிரம்மா, விஷ்ணு, தேவர்கள், ரிஷிகள், சித்தர்கள், முனிவர்கள், ஞானிகள், பக்தர்கள் என்று அனைவருக்கும் தன் அருட்கருணையினாலே கருணாமூர்த்தியான அருள்மிகு அண்ணாமலையார் ஞான தீட்சை அளிக்கிறார். அருள்மிகு அண்ணாமலையாரை கிரிவலம் செய்ய நாம் ஒரு அடி எடுத்துவைத்தால் அஸ்வமேதயாகம் செய்த பலன் கிடைக்கும்.

**எண்ணில் பெறும் சிறப்புடைய இத்தலத்தில் திருக்கோயில் கொண்டருளும் அருள்தரும் உண்ணாமுலைக்கும், அருள்மிகு அண்ணாமலைப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தனம், ஸ்வர்ணபந்தனம் சாத்தியும், எங்கும் காணா ஏற்றமுடைய இராஜகோபுரங்கள், விமானங்கள் ஆகியன புதுப்பித்தும், நிகழும் ஸ்ரீ துர்முகி வருடம் தை மாதம் 24-ம் தேதி (06-02-2017) திங்கட்கிழமை, சுக்லபக்ஷம், தசமி திதி, ரோஹிணி நக்ஷத்திரம், அமிர்தயோகம், கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 09.05 மணிக்குமேல் 10.30 மணிக்குள் மீன லக்னத்தில் மஹாகும்பாபிஷேகமும், அன்று இரவு சுவாமி அம்பாள் திருக்கல்யாணமும், பஞ்சமூர்த்திகள், வெள்ளி ரிஷப வாகனத்தில் திருவீதிஉலாக் காட்சியும் நிகழ்ச்சி நிரலில் காணும்வண்ணம் சிறப்பாக நடைபெறும். அன்பர்கள் திரண்டு வந்து தரிசித்து அருள்தரும் உண்ணாமுலை உடனாகிய அருள்மிகு அண்ணாமலைப் பெருமான் திருவருள் மற்றும் எல்லா நலன்களும் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.**

### நிகழ்ச்சி நிரல்

| தமிழ் வருடம் மாதம் தேதி | ஆங்கில வருடம் மாதம் தேதி | கிழமை | நேரம் | காலை நிகழ்ச்சிகள் | நேரம் | மாலை நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|---|---|---|
| துர்முகி வருடம் தை - 13 | 26-01-2017 | வியாழன் | | | 6.05 | மங்கள இசை, ஸ்ரீ துர்கையம்மன் உற்சவம் |
| 14 | 27-01-2017 | வெள்ளி | | | 7.00 | ஸ்ரீ பிடாரி அம்மன் உற்சவம் |
| 15 | 28-01-2017 | சனி | 7.30 | ஸ்ரீ அனுக்ஞை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, மகா சங்கல்பம், தனபூஜை, திரவிய விபாகம், ஸ்ரீ கணபதி ஹோமம்,மஹாலக்ஷ்மி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், பிரம்மசாரி பூஜை, கஜபூஜை, கோபூஜை, அஸ்வபூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை | 7.00 | பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம் |
| 16 | 29-01-2017 | ஞாயிறு | 8.30 | ஸ்ரீ மூர்த்திஹோமம், ஸ்கந்தஷடங்க ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை | 7.00 | வாஸ்து சாந்தி |
| 17 | 30-01-2017 | திங்கள் | 9.05 | திசா ஹோமம், ஆசார்யவரணம், சம்ஹிதா ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை | 5.00 | மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம் ஆசார்ய ரக்ஷாபந்தனம் |
| 18 | 31-01-2017 | செவ்வாய் | 8.30 | சாந்தி ஹோமம், அக்னி ஸங்க்ரஹணம், தீர்த்த ஸங்க்ரஹணம், பரிவார மூர்த்திகள் அஷ்டபந்தனம் சாற்றுதல், பூர்ணாஹுதி, தீபாராதனை | 5.00 | கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ராஹோமம், யாத்ரா தானம், யாகசாலை ப்ரவேசம், முதல்கால யாகபூஜை ஆரம்பம், விசேஷத்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை |
| 19 | 01-02-2017 | புதன் | 9.05 | விசேஷ சந்தி இரண்டாம் கால யாகபூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை | 4.30 | விசேஷ சந்தி மூன்றாம் கால யாகபூஜை, பூர்ணாஹுதி தீபாராதனை |
| 20 | 02-02-2017 | வியாழன் | 5.00 | பரிவார யாகசாலை பூஜை ஆரம்பம் | 4.30 | விசேஷ சந்தி, ஐந்தாம் கால யாகபூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை |
| | | | 8.05 | விசேஷ சந்தி, நான்காம் கால யாக பூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை | | |
| | | | | 9.00 முதல் 10.30 க்குள் மீன லக்னத்தில் பரிவார தேவதைகள் கும்பாபிஷேகம் | | |
| 21 | 03-02-201 | வெள்ளி | 8.30 | விசேஷ சந்தி ஆறாம் கால யாகபூஜை, பூர்ணாஹுதி தீபாராதனை | 4.30 | விசேஷ சந்தி, ஏழாம் கால யாகபூஜை, மூலஸ்தானம் ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேத அருணாசலேசுவரர் அஷ்டபந்தனம் சாத்துதல், பூர்ணாஹுதி, தீபாராதனை |
| 22 | 04-02-2017 | சனி | 8.05 | விசேஷ சந்தி எட்டாம் கால யாகபூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை | 4.30 | விசேஷ சந்தி, ஒன்பதாம் கால யாகபூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை |
| 23 | 05-02-2017 | ஞாயிறு | 9.05 | விசேஷ சந்தி, பத்தாம் கால யாகபூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை | 4.15 | விசேஷ சந்தி, பதினோராம் கால யாகபூஜை, பிம்பசுத்தி ரக்ஷாபந்தனம், தத்வார்ச்சனை, ஸபர்ஸாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை |
| 24 | 06-02-2017 | திங்கள் | 3.00 | பனிரெண்டாம் கால யாகபூஜை, | 4.30 | மஹாபிஷேகம் |
| | | | 6.30 | மஹாபூர்ணாஹுதி | | |
| | | | 7.15 | யாத்ராதானம், கடம் புறப்பாடு | 8.30 | திருக்கல்யாணம் |
| | | | 9.15 | இராஜகோபுரம் மற்றும் மூலஸ்தானம், ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேத அருணாசலேசுவரர் விமானம் கும்பாபிஷேகம் | | |
| | | | 10.05 | ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேத அருணாசலேசுவரர் மூலவர் மஹாகும்பாபிஷேகம் | 10.00 | பஞ்சமூர்த்திகள் வீதியுலா |

யாகசாலை உபயதாரர்
**நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்**

சர்வசாதகர்கள்: பட்டம். **சா. ஹாலாஸ்யநாத சிவாசார்யர்,** இளவரசு பட்டம். **ப. தியாகராஜ சிவாசார்யர்**
அர்ச்சகம், அ/மி அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை
திருக்கோயில் சிவாசார்யார்கள் மற்றும் பணியாளர்கள்.

திருமதி. **சி. ஹரிப்ரியா** BL., PGDLA.,
தக்கார்/இணை ஆணையர்/செயல் அலுவலர்
அ/மி அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை